www.Padasalai.Net

# அரையாண்டுத் மாதிரி தேர்வு

## பொருளியல். --மேல்நிலை முதலாம் ஆண்டு

காலம் : 3.00 மணி மொத்த மதிப்பெண்கள் : 90

பகுதி –அ

**I.** பொருத்தமான விடையை தெரிவு செய்யவும். **20 X 1 = 20.**

1) கீழ்க்கண்டவற்றுள் எந்த வகையான அங்காடியில் விலை மிக அதிகமாக இருக்கும்?
அ) நிறைவுப் போட்டி ஆ) முற்றுரிமை இ) இருமுகமுற்றுரிமை ஈ) சில்லோர்முற்றுரிமை

2 ) பகிர்வுக் கோட்பாடு எவ்வாறு அழைக்கப்படுகிறது?
அ) உற்பத்தி விலைக் கோட்பாடு ஆ) காரணி விலைக் கோட்பாடு இ) கூலிக்கோட்பாடு ஈ) வட்டிக்கோட்பாடு

3. கீழ்க்கண்டவற்றுள் எது முன்னேற்றம் அடைந்தநாடு?
அ) மெக்ஸிகோ ஆ) கானா இ) பிரான்ஸ் ஈ) ஸ்ரீலங்கா

4 ) F P I என்பதன் விரிவாக்கம்
அ) வெளிநாட்டு தனியார் முதலீடு ஆ) வெளிநாட்டு தொகுப்பு முதலீடு
இ) வெளிநாட்டு நேரடி முதலீடு ஈ) வெளிநாட்டு செலாவணி தனியார் முதலீடு

5 ) உலக அளவில் இந்தியா __ உற்பத்தியில் மிகப் பெரிய உற்பத்தியாளராக விளங்குகின்றது.
அ) பழங்கள் ஆ) மதுப்பொருட்கள் இ) காப்பி ஈ) தேயிலை

6 ) இரண்டு முற்றிலும் வேறுபட்டதன்மைகளைதொடர்பு படுத்தி குறிப்பது
அ) நுட்பம் ஆ) சார்ந்திருப்பு இ) இரட்டைதன்மை ஈ) சமமின்மை

7) நாடுகளின்செல்வம் மற்றும் காரணங்களைக் குறித்த ஒரு விசாரணை என்ற நூலின்ஆசிரியர்
அ) ஆல்ஃபிரட் மார்ஷல் ஆ) ஆடம் ஸ்மித்
இ) இலயன்ஸ் ராபின்ஸ் ஈ) பால் அ சாமுவேல்சன்

8. பயிர் உற்பத்தியில் எந்தப் பயிரைத் தவிர தமிழ்நாடு முன்னணியில் உள்ளது?
அ) வாழைப்பழம் ஆ) மாங்காய் இ) பயிர்கள் ஈ) ஏலக்காய்

9. எந்தபயிர் உற்பத்திக்காகஅதிகப் பரப்பு நிலம் பயன்படுத்தப்படுகிறது?
அ) ல் ஆ) கரும்பு இ) நிலக்கடலை ஈ) மாங்காய்

1 0 ) ஒரு அணியின்அணிக்கோவைமதிப்பு Δ=0 என்றால் அச்சார்புகளுக்கு தீர்வு ____________,

அ) உண்டு ஆ) கிடையாது இ) எண்ணிலி (infinity)
ஈ) பூஜ்யம்.

11) ஆயிரம் மக்களுக்கு பிறப்பவர் எண்ணிக்கை என்பது
அ) கச்சாஇறப்பு வீதம் ஆ) இறப்பு வீதம்
இ) சோர்வு வீதம் ஈ) கச்சாபிறப்பு வீதம்

12) முற்றுரிமைபோட்டியின் முக்கியபண்பு
அ) ஒரேவிதமான உற்பத்தி ஆ) விற்பனைச்செலவு
இ) ஒரு விற்பனையாளர் ஈ) ஒரு வாங்குபவர்

13) சராசரிச் செலவுக்கான வாய்ப்பாடு
அ) AVC / Q ஆ) TC / Q இ) TVC / Q ஈ) AFC / Q

14) மொத்த மாறாச் செலவு 100, மொத்த மாறும் செலவு 125 எனில் மொத்தச் செலவைக் கணக்கிடுக.
அ) 125 ஆ) 175 இ) 225 ஈ) 325

15) ஓர் அலகு உற்பத்திக் காரணியை அதிகரிக்கும் போது கிடைக்கும் உற்பத்தி
அ) இறுதிநிலைஉற்பத்தி ஆ) மொத்தஉற்பத்தி
இ) சராசரி உற்பத்தி ஈ) ஆண்டு உற்பத்தி

16) நவீன பொருளியல் வல்லுனர்களின் விதி
அ) வளர்ந்து செல்விகித அளவு ஆ) குறைந்து செல்விகித அளவு
இ) மாறா விகித அளவு ஈ) மாறும் விகித அளவு

17. நெகிழ்ச்சி ஒன்றுக்குச் சமமாக இருக்கும்போது ..........
அ. அலகுத் தேவைநெகிழ்ச்சி ஆ. முற்றிலும்நெகிழ்ச்சியின்மை
இ. முற்றிலும்நெகிழ்ச்சியற்ற தேவை ஈ. மிகைத் தேவை

18) "ஓர் உற்பத்தியாளர் ஒப்பந்தத்தின் மூலம் உழைப்பாளி தன் பணியை வழங்கியதற்காக கொடுக்கும் மொத்த பணமே கூலியாகும்" இதைக் கூறியவர்யார்?
அ) பென்ஹாம் ஆ) மார்ஷல் இ) வாக்கர் ஈ) J.S. மில்

19. பனிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் முக்கிய நோக்கம்
அ) விரைவான மற்றும் அதிகமான ஒருங்கிணைந்த வளர்ச்சி
ஆ) சமூக நீதியுடன் கூடிய வளர்ச்சி இ) சோசலிச முறையிலான சமூகம்
ஈ) விரைவான உள்ளடக்கிய மற்றும் நிலையான வளர்ச்சி

20) "இந்திய விவசாயி கடனாளியாக பிறந்து, கடனாளியாக வாழ்ந்து, கடனாளியாக இறந்து, கடனயே சந்ததிக்கு விட்டுச் செல்கிறான்" இச்சொற்றொடரைக் கூறியவர் யார்?
அ) ஆடம் ஸ்மித் ஆ) காந்தி இ) அமர்தியா சென் ஈ) சர் மால்கம் டார்லிங்

பகுதி ஆ

**II.** எவையேனும் 7 வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடை அளிக்கவும்

V.G.P. CHANDRAN SIVAKASI VNRDT.,

Kindl send me your district Questions & Keys to email Id - Padasalai.net@gmail.com

வினா எண் 30 கட்டாயம் விடை அளிக்கவும் . **7 x 2 = 14**

21. நுண் பொருளியல் என்றால் என்ன?

22. விருப்பங்களை வகைப்படுத்து.

23. உழைப்பு – வரையறு

24. செலவுச் சார்பை வரையறு.

25. விலையை ஏற்பவர் யார்?

26. பகிர்வின் வகைகள் யாவை?

27. புதுப்பிக்கப்பட இயலாத ஆற்றல் வளங்கள் தருக

28. பத்தாம் ஐந்தாண்டுத் திட்ட த்தின் நோக்கங்கள் யாவை ?

29. மறைமுக வேலையின்மை என்றால் என்ன?

30. ஒரு பொருளின்விலை pயும் அளவு qவும் q = 30 – 4p – p2 என்ற சமன்பாட்டால் இணைக்கப்பட்டால் (i) p = 2 என்ற மதிப்பில் தேவைநெகிழ்ச்சிகெழு மதிப்பு மற்றும் (ii) இறுதிநிலைவருவாய் மதிப்பு காண்.

## பகுதி –இ

**III.** எவையேனும் 7 வினாக்களுக்கு ஒரு பத்தியில் விடை அளிக்கவும் .

வினா எண் 40 க்கு கட்டாயம் விடையளிக்கவும் . **7 x 3 = 21**

31. பொருளியலைப் பற்றிய பற்றாக்குறை இலக்கணத்தை விளக்குக. மேலும் அதனை மதிப்பீடு செய்க.

32. சமநோக்கு வளைகோடுகளின் பண்புகள் யாவை ?

33. நிலத்தின் சிறப்பியல்புகள் யாவை ?

34. இறுதிநிலை வருவாய் - குறிப்பு வரைக.

35. அங்காடியின் இயல்புகள் யாவை ?

36. புத்தாக்க இலாபக் கோட்பாட்டை சுருக்கமாக கூறுக.

37. வேளாண்மை பொருளாதாரம் பற்றி அம்பேத்கரின் பொருளாதார கருத்துக்களை கூறுக.

38. வெளிநாட்டு முதலீட்டுக் கொள்கை பற்றி குறிப்பு வரைக

39. தமிழ்நாடு மற்றும் இந்தியாவில் ஏதேனும் இரண்டு உணவுப் பயிர்களின் உற்பத்தித் திறன்களை ஒப்பிடுக

40. MS Excel Sheet செயல்படுத்துவதில் உள்ள நிலைகளை விளக்குக.

V.G.P. CHANDRAN SIVAKASI VNRDT.,

**Kindl send me your district Questions & Keys to email Id - Padasalai.net@gmail.com**

பகுதி -ஈ

**IV. அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்கவும். 7 x 5 = 35**

41. அ) பொருளியலின் தன்மை மற்றும் எல்லையை விவரி.

**அல்லது.**

ஆ) சம இறுதிநிலை பயன்பாட்டு விதியை விளக்குக.

42. அ) விகித அளவு விளைவு விதியை உதாரணத்துடன் விளக்குக.

**அல்லது.**

ஆ) . பல்வேறுபட்ட விலை நிலைகளில் AR மற்றும் MR கோடுகளுக் கிடையேயான தொடர்பை விளக்குக.

43. அ) சில்லோர் முற்றுரிமையின் பண்புகளை விளக்குக.

. **அல்லது.**

ஆ) கடன்நிதி வட்டிக் கோட்பாட்டை விளக்குக.

44. அ) இந்தியப் பொருளாதாரத்தின் வலுவான அம்சங்களை விவரி.

**அல்லது.**

ஆ) ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் இந்தியப் பொருளாதாரம் பற்றி விவாதிக்க .

45. அ) தொழிற் கொள்கை தொடர்பாக இந்திய அரசு மேற்கொண்ட முயற்சிகளை விளக்குக.

**அல்லது.**

ஆ) ஊரக பொருளாதாரத்தின் பண்புகள் விசித்திரமானவை : விவாதி.

46. . அ) மக்கள் தொகையின் தரமான அம்சங்களை விவரி

**அல்லது.**

ஆ) வகைக்கெழு கணித முறையைப் பயன்படுத்தி தேவையின் சமன்பாடு $P = 60 - 0.2Q$ ஆக இருக்கும்போது (i) P =0, (ii) P =20, (iii) P =40 என்றால் தேவை நெகிழ்ச்சிக்கெழு மதிப்பு காண்.

47. அ) தேவை விதி மற்றும் அதன் விதி விலக்குகளை விவரி.

**அல்லது.**

ஆ) குறுகிய காலச் செலவுக் கோடுகளை தகுந்த படத்துடன் விவரி.

V.G.P. CHANDRAN SIVAKASI VNRDT.,

**Kindl send me your district Questions & Keys to email Id - Padasalai.net@gmail.com**